சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 91/2018

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 8 (LW 10) | நாள் | 09.09.2024 |
| பெயர் | தென்னரசு | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை. )

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் தற்போது புத்தகரத்தில் வசித்து வருகிறேன். மயிலாடுதுறை வட்ட வழங்கல் அலுவலகத்தில் RI ஆக பணிபுரிந்து வருகிறேன். 2010 வது வருடம் கடலங்குடி கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தேன். என்னிடம் காட்டப்படும் சான்று கடந்த 2010 வது வருடம் நான் கடலங்குடி கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்த போது கொடுத்த சான்று ஆகும். மயிலாடுதுறை வட்டம் நம்பர் 2 கடலங்குடி கிராமம் விநாயகர் கோவில் தெரு முகவரியில் ஹபிப்ஜான் த/பெ. ஈரான் சாஹிப் என்பவர் வரதராஜ பெருமாள் சுவாமிக்கு சொந்தமான புல எண். 208-1 (17) ல் 33 1/3 சென்ட் புஞ்சை இடத்தை குத்தகை உரிமையுடன் ( (RTR) அனுபவித்து வருகிறார் என்றும், மேற்படியார் சிமென்ட் சுவர் ( compound) அமைத்து இருந்த இடம் ஹபிப்ஜான் அனுபவத்தில் உள்ளது என்று சான்று வழங்கினேன். அந்த சான்று **அ.சா.ஆ. 5** ஆகும். மணல்மேடு போலிசார் சான்று வழங்கிய சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் 1வது எதிரியே குறுக்கு விசாரணை செய்தார்

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

10.03.2008 அன்று கடலங்குடி கிராம நிர்வாக அதிகாரியாக பொறுப்பேற்றேன். அங்கு சுமார் 4 வருடகாலம் பணிபுரிந்தேன். எனக்கு புகார்தாரர் மற்றும் 1வது எதிரியை தெரியும் என்றால் சரி. அவர்கள் இருவருக்கும் சொத்து சம்பந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் இருப்பது தெரியுமா என்றால் தெரியும். ஹபிப்ஜான் கோவில் நிலத்தில் குத்தகை உரிமையாளராக அனுபவித்து வருகிறார் என்றும் அந்த இடத்தில் சிமெண்ட் காம்பவுண்ட் சுவர் அமைந்து இருந்ததாக போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். 08.06.2010 அன்று மணல்மேடு போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். சான்றிதழ் எந்த தேதியில் வழங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் மணல்மேடு காவல்துறையினரிடம் விசாரணைக்கு ஆஜராக உயரதிகாரியிடம் அனுமதி பெற்றேனா என்றால் அதற்கு அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. 25.04.2011 அன்று மயிலாடுதுறை வட்டம் 2 கடலங்குடி கிராமம் விநாயகர் கோவில் தெரு முகவரியில் வசித்து வந்த ஹஜ்ஜிமுகமது த/பெ. அப்துல் மஜிது மற்றும் முகமது பாசில் த/பெ. ஹஜ்ஜி முகமது மற்றும் குடும்பத்தார்கள் அனைவரும் மேற்படி முகவரியில் கடந்த சில மாதங்களாக வசிக்கவில்லை என்றும், விசாரணையின் அடிப்படையில் தெரியவருகிறது என சான்றளித்தேன் என்றால் சரி. அந்த சான்று வழங்குவதற்கு முன்பு யார் யாரை விசாரித்தேன் என்றால் அந்த தெருவில் உள்ளவர்களை விசாரித்தேன். அந்த வாக்குமூலம்என்னிடம் உள்ளதா என்றால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை வாய்மொழியாக விசாரித்தேன். அந்த சான்றை யார் வாங்கிபோனர்கள் என்றால் காவல்துறையினர் கேட்டதால் கொடுத்திருப்பேன். அவர் எங்கிருக்கிறார் என்று விசாரிக்காமல் சான்று வழங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் அந்த கிராமத்தில் அந்த விலாசத்தில் வசிக்கவில்லை என்று சான்று வழங்கியிருக்கிறேன். காம்பவுண்ட் சுவர் 1வது எதிரி குடியிருக்கும் வீட்டிற்கு முன்னாடி வைக்கப்பட்டதா பின்னாடி வைக்கப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. கிராம நிர்வாக அதிகாரி அந்த கிராமத்தில் நடக்கும் பிறப்பு, இறப்பு, தீ விபத்து ஆகியவற்றை காவல் துறையினருக்கு தெரிவிக்க வேண்டுமென்றால் எங்கள் மேலதிகாரிக்கு தெரிவிக்கவேண்டும். நான் ஒரு அரசு அதிகாரியாக இருந்து நானும் போலிசாரும் புகார் தாரரும் 1வது எதிரி குடியிருந்த வீட்டை இடத்து விட்டோம் என்றால் தவறு. காவல் துறையினரிடம் என்மீதும் மற்ற 17 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்து அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து உயர் நீதிமன்ற உத்தரவின்பேரில் மயிலாடுதுறை JM - 1 நீதிமன்றத்தில் CC. 54/2017 என்ற வழக்கு என்மீதும் மற்ற எதிரிகள் மீதும் கோப்புக்கு எடுக்கப்பட்டு நான் அதில் 14 வது எதிரி என்பது தெரியுமா

என்றால் தெரியாது. இருதரப்பினருக்கும் சிவில் வழக்கு நிலுவையில் இருப்பது தெரியும் என்று சாட்சியமளித்திருப்பதால் நான் புகார்தாரருக்கு ஆதரவாக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சான்று வழங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. களவிசாரணையின் அடிப்படையில் சான்று வழங்கினேன். 1வது எதிரி குடியிருந்த வீடு எப்போது யார் இடித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 25.04.2011 அன்று சான்று வழங்கியிருக்கும்போது அந்த வீடு எப்போது இடிக்கப்பட்டது என்று தெரியாது என்று பொய்யாக சாட்சியமளித்தேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி கலக்டரிடம் தனது வீட்டை போலிசார் இடித்துவிட்டதாக மனு கொடுத்து கலக்டர் பார்வையிட்டது தெரியுமா என்றால் தெரியும். கலக்டர் வரவில்லை. வட்டாட்சியர் வந்தார்என்று நினைக்கிறேன். வட்டாட்சியர் , RI யிடம் என்ன வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் ஞபாகம் இல்லை. வட்டாட்சியர் RI 1வது எதிரி கொடுத்த மனுவின் மீது பார்வையிட்ட போது அந்த இடத்தில் வீடு இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. தேதியும் ஞாபகம் இல்லை. 1வது எதிரியை வலுக்கட்டாயமாக வீட்டை விட்டு வெளியேற்றி விட்டு புகார்தாரரிடம் பெரும்தொகை பெற்றுக்கொண்டு பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றாலும் பொய் சான்று வழங்கினேன் என்றால் தவறு.